சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 27.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 30/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-13 |
| சாட்சியின் பெயர் | : | ராஜமோகன் |
| தந்தை பெயர் | : | கலியபெருமாள் |
| கிராமம் | : | லால்குடி உட்கோட்டம் |
| தாலுக்கா | : | லால்குடி |
| தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| வயது | : | 56 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது திருச்சி மாவட்டம், லால்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருவாரூர்

மாவட்டத்தில், நில அபகரிப்பு சிறப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தேன். அப்போது கடந்த 05.05.2021 ஆம் தேதி நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக கூடுதல் பொறுப்பில் இருந்தேன். அப்போது குடவாசல் காவல் நிலைய குற்ற எண்.153/2021 சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) of IPC r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST(PoA) Act-ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கினை விசாரணை செய்ய திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் ஒரு செயல்முறை ஆணை C.No.10/SJ&HR/TVR/2021. Dt:05.02.2021 ன் உத்தரவிட்டிருந்தார். அந்த செயல் முறை ஆணை **அ.சா.ஆ-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உத்தரவின் படி வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.02.2021 மதியம் 1.30 மணியளவில் சம்பவ இடமான காவானூர், காவேரி தெரு சென்று சாட்சிகள் அ.சா-9 பார்த்திபன் மற்றும் நாகசெல்வன் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ 2 ஆன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஒன்றும் தாயர் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் இவ்வழக்கின் காயம் பட்ட சாட்சி நாகப்பன், சம்பவ இட சாட்சிகள் அ.சா-2 யோகராஜ், அ.சா-3 கணேசன், அ.சா-4 சேகர், அ.சா-5 ஸ்டாலின், ராஜா ஆகியோர்களை விசாரித்து தனி தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் நடந்தது உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரி கிருஷ்ணமூர்த்தி மகன் குமார் என்பவரை ஓகை பேருந்து நிறுத்தம் அருகில் சாட்சி அடையாளம் காட்ட மேற்படி எதிரியை காரணம் கூறி கைது செய்து, விசாரணை செய்து 17.00 மணிக்கு குடவாசல் காவல் நிலையம் அழைத்துவந்து பிரேத பரிசோதனை செய்து வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.ஆ-9 உரிய விதிமுறைகளின் படி எனக்கு வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், பார்வை மகஜர், வரைபடம் ஆகியவற்றை பின்னிட்டு வழக்கிற்கு ஏற்றார் போல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை

என்றாலும், அவர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள நாள், நேரம், இடம் மற்றும் விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கைது குறிப்பாணையில் சாட்சி எதிரியை அடையாம் காட்டினார் என்ற விபரம் இல்லை என்றால் அது போன்ற காலம் இல்லை. விபத்து பதிவேடுகள் எதுவும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரி மீது தவறாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைக்கு ஏற்றார் போல் விசாரணை வாக்குமூலங்களை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையின் படி சம்பவ நேரம் இரவு 10.00 மணி என்றால் சரிதான். அ.சா-1 நாகப்பன் முதல் முதலாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நேரம் காலை 10.05 என்றால் சரிதான். மருத்துமனையில் சேர்ந்த நேரம் எனக்கு தெரியாது. நான் புலன் விசாரணை சரியாக மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.27 18:01:19 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.